# தேவஇயல்

## தேவனுடைய பெயர்கள்

பழைய அல்லது புதிய ஏற்பாட்டில் ஒரு விசேஷித்த அர்த்தம் கொண்டிராத மனித அல்லது தெய்வீகத்துவத்து பெயரை காண்பது மிகவும் கடினம் ஆகும். தெய்வீகத்தின் எந்த ஒரு பெயரும் அல்லது விவரிப்பும் குறிப்பாக தனிச் சிறப்புடையதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெயர்ளை தேவன்தாமே தனிப்பட்ட வகையில் தேர்ந்துகொண்ட செயலானது அவரது மக்களால் அவருக்கு கொடுக்கப்பட்ட பெயர்களின் வளமான அர்த்தத்தை நாம் கண்டுகொள்ள நம்மை அனுமதிக்கின்றன. காட்சிப்பெட்டியில் உள்ள விலை உயர்ந்த ஆபரணங்களை ஆய்வு செய்வதுபோல அந்த பெயர்களை படித்தறிவது என்பது தெய்வீகத்தை பற்றி ஒருவருடைய மதிப்பை ஆழப்படுத்துவதாகும்.

a. 'ஏல்'- தேவன். எபிரேய மொழியில் தேவத்துவம் என்பதற்கான இயற்பெயரானது 'ஏல்'அல்லது 'ஏலோக்' என்ற பெயர்ச்சொல் வேரின் மீது கட்டியமைக்கப்பட்டுள்ளது. எபிரேய ஆண் ஒருமை சொல்லுடன் 'ஹிம்' என்பதை சேர்க்கையில் அது பன்மைச்சொலாக்கப்படுகின்றது. இவ்விதமாக 'ஏலோஹிம்' என்ற வார்த்தையையும் பார்க்கின்றோம். இந்த பெயர்ச்சொல்லின் அமைப்பு பன்மை சொல்லாக இருக்கிறது.

   **<u>ஆராதனைக்குரிய ஒரே ஒருவர்:</u>** ஆதியாகமம் 1:1 இல் பயன்படுத்தப்பட்ட வகையில் 'தேவன்' என்ற வார்த்தையானது ஆராதனைக்குரியவர் என்பதை மட்டும் குறிப்பிடாமல் ஆராதனைக்குரிய ஒரே ஒருவர் என்பதையும் குறிப்பிடுகின்றது. விசேஷித்த தெய்வீகத்தின் தனிப்பட்ட தன்மை என்ற வகையில் பின்னாளில் பத்து கட்டளைகளில் முதலாவது கட்டளையில் ஆராதிக்கப்பட வேண்டியவர் என்று எழுதப்பட்டுள்ளது. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்று சொல்லப்பட்டது (யாத்திராகமம் 20:3). உன் தேவனாகிய கர்த்தருக்கு பயந்து அவரைச் சேவித்து அவரைப் பற்றி கொண்டிருந்து (உபாகமம் 10:20) என்ற கூற்றில் 'மாத்திரமே' என்ற வார்த்தை புரிந்து கொள்ளப்பட்டதென்று இயேசு கருதினார். அவர் உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக (மத் 4:10) என்று கூறியதில் மறைமுக கருத்தையும் சேர்த்து அளித்தார். இவ்விதமாக பழைய ஏற்பாட்டில் தெய்வீகத்தின் இந்த முதல் விவரிப்பு உலகளாவிய வகையில் ஆராதனைக்குரிய ஒரே ஒருவரை உச்சகட்ட வல்லமை உள்ள ஒருவரைப்பற்றிய கருத்தை வாசிப்பவர்களின் சிந்தனைகளில் ஆழமாகப் பதியச்செய்திருந்தது.

b. 'ஏலோஹிம்' என்ற வார்த்தையின் பன்மைத்தன்மை: 'தேவன்' என்பதில் இருந்து 'தேவர்கள்' என்று மாற்றம் பெற்ற வடிவம் போன்ற மோசேயின் எழுத்துக்களில் 'தேவர்கள்' (GODS) என்பதில் 'கள்' என்று அல்லாமல் 'ஹிம்' என்று சேர்த்து ஏற்படுத்தப்பட்டன. 'ஏலோஹிம்' என்ற வார்த்தை ஒரு பன்மை வார்த்தையாகும் இருப்பினும்; இது மெய்யான ஜீவனுள்ள ஒரே தேவனை குறிப்பிடும்பொழுது மொழிபெயர்ப்பாளர்கள் எபிரேய பன்மை வார்த்தையை ஆங்கில வார்த்தையான 'GOD' என்பதாக அழைத்தனர். இது ஆதியாகமம் 11ல் சொல்லப்பட்டதுபோல ஜீவனுள்ள ஒரே தேவனை குறிக்கின்றதா இல்லையா என்பதை சந்தர்ப்பபொருள்தான் அதாவது அதன் பிண்ணனிதான் முடிவு செய்கின்றது. 'ஏலோஹிம்' என்ற வார்த்தை 'தெய்வங்கள்' என்ற நிலையில் இங்கு குறிப்பிடப்படுவதை சந்தர்ப்பபொருள் காண்பிக்கின்றது (யாத்திராகமம் 20:3). என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் அதாவது 'ஏலோஹிம்' உண்டாயிருக்க வேண்டாம். இங்கே 'ஏலோஹிம்' என்ற வார்த்தை என்பது ஜீவனுள்ள தேவனையும்; அந்நிய தேவர்களையும் குறிப்பிடுகிறது. அந்த வேறுபாட்டை நாம்தான் சந்தர்ப்பபொருளின் பின்னணியின் அடிப்படையில் புரிந்துகொள்ளவேண்டும். ஜீவனுள்ள தேவனை குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள 'ஏலோஹிம்' என்ற வார்த்தையின் பயன்பாடெல்லாம் பன்மைத்துவத்தை அதாவது திரித்துவத்தை காட்டுகிறது.

'ஏலோஹிம்' - தேவன். தெய்வீகத்தை பற்றிய பழைய ஏற்பாட்டின் முதல் விவரிப்பானது ஆதியாகமம் 1:1 இல் உள்ளது. ஆதியிலே தேவன் (ஏலோஹிம்) தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். இந்த 'ஏலோஹிம்' என்ற பதமானது பழைய ஏற்பாட்டில் 2570 முறை வருகிறது. இதில் இந்த பெயரானது ஜீவனுள்ள தேவனை குறிப்பிடுவதற்காக 2310 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. வேதாகமத்தின் முதல் வசனமே இந்த பெயரைக் கொண்டுள்ளது. இந்த பெயரானது அந்நிய தேவர்களை மற்றும் பொய்யான தேவர்களை குறிப்பதற்காகவும்

பயன்படுத்தப்பட்டுள்ளது (ஆதியாகமம் 35:2, 4; யாத்திராகமம் 12: 2; 18:11; 23: 24). மேலும் தேவனின் முதன்மையான பெயர்களாகிய 'யாவே', 'அடோனாய்' என்ற பெயர்களோடு இந்த 'ஏலோஹிம்' என்ற பெயரும் ஒன்றாயிருக்கிறது.

தேவன் என்ற வார்த்தையின் அர்த்தம் தவறாக எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு கருத்து: 'தேவன்' மற்றும் 'நல்லது' என்ற வார்த்தைகள் தொடர்புடையவைகள் என்று சிலர் நினைத்துள்ளனர். இந்த வார்த்தைகள் ஆங்கில மொழியில் ஒன்றுபோலவே உச்சரிப்பை கொண்டுள்ளன. 'ஆடம் கிளார்க்' (Adam Clarke) என்பவர் ஆங்கில வார்த்தையான 'GOD' என்பது தெய்வீகத்தையும், நட்பையும் சுட்டிக்காட்டுவதாக ஆதியாகமம் 1:1 பற்றி விளக்கமளித்தார். வேதாகமத்தின் தேவன் சாராம்சத்தில் நற்பண்பு உடையவராக இருக்கிறார். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள் என்று தாவீது வியந்து கூறினார் (சங்கீதம் 34:8).

வேதாகமத்திற்கு புறம்பே கடவுள்கள் நல்லவர்களாக இருந்ததில்லை; 'GOD' என்ற வார்த்தை நற்பண்பை குறிப்பிடும் என்றால் புறசமய தெய்வீகத்துவங்களை குறிப்பதற்கு முற்றிலும் தவறான வழியிலேயே பயன்படுத்தப்பட்டது எனலாம். 'யுரேனஸ்' என்ற கடவுள் தனது சொந்த பிள்ளைகளையே வெறுத்து சிறையிலிட்டதாக கூறப்படுகின்றது. 'யூப்பித்தர்' என்ற கடவுள் தான் கடவுளர்களின் அரசனாவதற்காக தன் தந்தையை தூக்கி எறிந்தது பற்றியும் கதைகள் கூறுகின்றன. மதக் கடவுள்கள் பேராவல், சண்டையிடுதல் மற்றும் சிற்றின்பவெறி ஆகியவை கூடியவைகளாக சித்தரிக்கப்பட்டனர். இருப்பினும் ஆதியாகமம் 1:1ல் மோசே பயன்படுத்திய 'ஏலோஹிம்' என்ற வார்த்தையானது நல்லது என்று அர்த்தப்படும் வார்த்தையுடன் உறவு எதுவும் இருப்பதில்லை. நல்லது என்ற வார்த்தை 'தோப்' என்ற எபிரெய வார்த்தையிலிருந்து வருகின்றது. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார் (ஆதியாகமம் 1:4) என்பது போன்ற வகையில் காணப்படுகின்றது. அதாவது வெளிச்சம் (தோப்) நல்லது என்று தேவன் (ஏலோஹிம்) கண்டார் என்பது போன்ற வகையில் காணப்படுகின்றது. 'GOD' என்ற வார்த்தை வழிபடுவதற்குரிய, வேண்டுதல் செய்ய, என்ற அர்த்தத்தை உடையதாக ஆங்கில அகராதியில் கண்டறியப்படுகிறது. எனவே கடவுள் என்பது வழிபடுவதற்குரிய ஒரு பொருள் ஆகிறது.

அது போலவே 'ஏலோஹிம்' என்ற வார்த்தையிலிருந்து மிகப்பெரும்பாலும் தரவழக்கைக்கப்பட்ட வினைச்சொல் 'அலாக்' என்பதாகும். இது 'அல்லா'' என்னப்படுகிற இஸ்லாமிய சொல்லில் காணப்படியதாகும். இது பயத்துடன் சென்று வழிபடுதல் என்று அர்த்தப்படுகிறது. பயம் என்ற வார்த்தையில் தொடக்கத்தில் அடங்கியிருந்த மாபெரும் ஆராதனைக்குரியவரிடத்தில் கொண்டுள்ள பயபக்தி மற்றும் ஆழ்ந்த மரியாதை ஆகிய உணர்வில் மறைகின்றது. இதன் விளைவாக ஒருவர் தேவனுக்கு பயப்படுகிறார் என்று கூறுகையில் அதன் சந்தர்ப்பபொருளானது ஒருவர் தேவனை வழிபடுகின்றார் என்றாகின்றது. உன் தேவனாகிய கர்த்தருக்கு பயந்து என்று மோசே எழுதினார் (உபாகமம் 6:13) ஆனால் மோசேயின் கூற்றை இயேசு கிறிஸ்துவானவர் மேற்கோள் காட்டியபோது அவர் பயம் என்ற வார்த்தையை தகுதியான சந்தர்ப்பபொருளுடன் விளக்கினார். உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று கூறினார் (மத் 4:10).

<u>சிருஷ்டிக்கும் தேவன்:</u> வேதாகமத்தில் தெய்வீகத்தைப் பற்றிய முதல் விவரிப்பான 'ஏலோஹிம்' என்ற வார்த்தை 'சிருஷ்டிக்க' என்று அர்த்தப்படும்பொழுது அதன் எழுவாயாக 'பாரா' என்ற மனிதரை குறிக்கும் சொல்லைக் ஒருபொழுதும் பெற்றிராத ஒரு வார்த்தையுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. சிருஷ்டிக்கப்பட்டவைகளிலிருந்து மனிதன் வடிவமைக்கமுடியும் ஆனால் தேவனால் மட்டுமே சிருஷ்டிக்கமுடியும் (ஏசாயா 65:17; ஆமோஸ் 4:13). மரம் கொடுக்கப்பட்டால் மனிதனால் பொருட்களை உண்டாக்க முடியும்; ஆனால் தேவன் மட்டுமே ஒரு மரத்தை உண்டாக்கமுடியும். ஆதியாகமத்தின் சிருஷ்டிப்பு பற்றிய விவரமானது தேவன் சிருஷ்டிக்க பொருள் எதுவும் கொண்டிருந்ததாக குறிப்பிடுவதில்லை; மனிதனின் சரீரத்தை வடிவமைப்பதிலும் மற்றும் மிருகங்களை உருவாக்குவதிலும் தேவன் மண்ணை கொண்டு செயல்பட்டார் ஆனால், பூமியின் மண்ணை தேவன் எதைக்கொண்டு உருவாக்கினார். ஒன்றும் இல்லாமையிலிருந்து சிருஷ்டித்தில் என்பது மறைவான கருத்தாக உள்ளது. அவர் பேசினார்; அது ஆயிற்று; அவர் கட்டளையிட்டார்; அது நின்றது (சங்கீதம் 33:6; எபி 11:3). சிருஷ்டித்தல் மற்றும் உருவாக்குதல் அல்லது வடிவமைத்தல் ஆகிய இரு செயல்களையும் தேவன் நிகழ்த்தினார் என்பது அவர் 'பூர்' அதாவது சிருஷ்டித்தவர் என்றும் (ஏசாயா 40:28) 'ஓசே' அதாவது உண்டாக்கியவர் என்றும் (ஏசாயா 54:5) சொல்கிறது. மற்றும் 'யோத்சர்' அதாவது உருவாக்குபவர் அல்லது வடிவமைத்தவர்

அல்லது சிருஷ்டிகர் என்றும் (ஏசாயா 45:11) வேதம் வலியுறுத்தப்படுகின்றது. இவ்விதமாக ஆதியாகமம் 1:1 இல் உள்ள 'ஏலோஹிம்' அதாவது தேவன் என்பது ஆராதனைக்குரிய ஒரே ஒருவரை எல்லா மேன்மையும் கனமும் அதிகாரமும் உள்ள ஒருவரை, ஒன்றும் இல்லாமையிலிருந்து உலகங்களையும் மனிதரையும் சிருஷ்டிக்கக்கூடிய ஒருவரையே குறிப்பிடுகின்றது. தேவனைப் பற்றிய இந்த சித்தரிப்புகள் நமது இருதயங்களை அவரைப் பற்றிய மதிப்பினாலும் அவருக்கு மரியாதை காண்பித்து அவரை நோக்கி நமது ஆராதனை ஏறெடுக்கக்கூடிய தன்மையினாலும் நிரப்பவேண்டும். நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்கால்படியிடகடவோம் வாருங்கள் என்று சொல்வதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும் (சங்கீதம் 95:6). இந்த 'ஏலோஹிம்' என்பது தேவனுடைய சர்வாதிகாரம் அதாவது சர்வ ஏகாதிபத்தியம் அவருடைய நியாயத்தீர்ப்பு மற்றும் இஸ்ரவேலருக்கு சார்பாக அவர் செய்த வல்லமையுள்ள கிரியைகள் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இருக்கிறது.

c. 'ஹா ஏலோஹிம்' - ஏனோக்கு தேவனோடு அதாவது 'ஹா ஏலோஹிமோடு' சஞ்சரித்தார் (ஆதி 5:22). சிருஷ்டிப்பின் தொடக்கத்தில் விக்கிரகங்கள், சொரூபங்கள், இன்னும் மற்ற பொய் தேவர்கள் இருந்ததில்லை. ஆனால், விக்கிரக ஆராதனை என்பது மிகப் பரவலான மனித தவறுகளாயிருக்கத் தொடங்கியது. ஏனோக்கு சேவித்த தேவன் யார் என்பது பற்றி மோசேயின் குறிப்பிடுதலானது விக்கிரகாராதனை அடையாளப்படுத்தப்பட்ட ஒரு பிரச்சனையாக இருந்த ஏனோக்கின் காலத்தைப் பற்றியது என்பது உண்மையாகும். மற்றவர்கள் என்ன செய்து கொண்டிருந்தபோதிலும் மெய்யான மற்றும் ஜீவனுள்ள ஒரே தேவனை விட்டு விலகாத ஏனோக்கின் தேவபக்தியை பரிசுத்த எழுத்தாளர் பாராட்டினார். ஆதாமின் காலத்திற்கு நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு பிறகு தேவன் என்ற வார்த்தைக்கு முன் இடப்பட்ட இந்த குறிப்பு சுட்டுசொல்லானது தொடக்கத்தில் இருந்த பல தெய்வ வணக்கமானது எட்டாம் நூற்றாண்டில் ஒரு தெய்வ வழிபாடாக பரிணமித்தது என்ற நிருபனமற்ற கருத்துக்கு எதிராக உள்ளது. மாறாக இது தொடக்கத்தில் இருந்த ஒருதெய்வ வழிபாடானது பின்னாளில் பல தெய்வ வழிபாடாக சீரழிந்ததை சுட்டிக்காட்டுகின்றது. 'ஹா ஏலோஹிம்' என்ற வார்த்தையும் முதலாவது பயன்பாட்டிற்குப் பிறகு இச்சொற்றொடரானது அடுத்த அதிகாரத்தில் மறுபடியும் தோற்றமளிக்கின்றது. ஏனோக்கின் கொள்ளுப்பேரனான நோவாவின் நாட்களில் நிகழ்ச்சிகளை கூறுகையில் தேவன் என்ற வார்த்தைக்கு முன்னதாக குறிப்பு சுட்டுசொல்லை மோசே மறுபடியும் பயன்படுத்தினார், இது ஒரு கனத்த தனிச்சிறப்பான பயன்பாடாகும். தேவபிள்ளைகளாக இருந்தவர்கள் விக்கிரகங்களை வழிபட மறுத்து மெய்யான ஒரே தேவனுக்கு உண்மையுடன் இருந்தார்கள். அவர்கள் இன்னொரு திசையில் தவறிழைத்தவர்களாயினர். அவர்கள் பல மனைவிகளை உடையவர்களாக இருந்தனர். ஒரு மனைவியுடன் ஒரே சரீரமாக வேண்டும் என்ற தேவனுடைய போதனையை அவர்கள் மீறி பல மனைவிகளுடன் அவர்கள் ஒரே சரீரமாயினர். வேதவசனம் ஆனது பல தெய்வ வழிபாட்டிற்கு முன்னதாக ஒரு தெய்வ வழிபாடு இருந்ததாகக் கூறுகின்றது மற்றும் இதன் எதிர் நிலையை கூறுவதில்லை விக்கிரகாராதனை பிரபலமான பொழுது ஏனோக்கு உயிருள்ள ஒரே தேவனுக்கு உண்மையானவராக தொடர்ந்து நிலைத்து நின்றார் என்பதற்கு உறுதியான சுட்டிக்காட்டுதலை நாம் காண்கின்றோம். நோவாவின் நாட்களில் உபதேசத்தில் உண்மையான தேவனை பற்றிக்கொண்டிருந்தவர்கள் ஒழுக்கத்தில் அவரை பற்றிக்கொண்டிருந்ததில்லை என்று தோன்றுகின்றது.

'ஏலோஹிம்' பயன்படுத்தப்பட்ட விதங்கள்:

1. இது அவருடைய இறையாண்மையில் பயன்படுத்தப்படுகிறது.
   - சர்வபூமியின் தேவன் (ஏசா 54: 5)
   - நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர் (எரே 32:27)
   - பரலோகத்தின் தேவன் (நெகே 2: 4)
   - தேவாதி தேவன், கர்த்தாதி கர்த்தர் (உபா 10:17)
2. இது சிருஷ்டிப்பில் பயன்படுத்தப்படுகிறது (வலிமைமிக்க செயல்கள்)
   - தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார் (ஆதி 1: 1)
   - எல்லாவற்றையும் படைத்தவர் (யோவான் 1: 9; ஏசா 45:18)

3. இது அவருடைய தீர்ப்பில் பயன்படுத்தப்படுகிறது.
    - தேவனே நியாயாதிபதி. (சங் 50:6). அவருடைய தீர்ப்பு தவறாகப்போவதில்லை.
    - பூமியிலே நியாயஞ்செய்கிற தேவன் (சங் 58:11)
4. இது இஸ்ரேல் சார்பாக வலிமைமிக்க செயல்களில் பயன்படுத்தப்படுகிறது.
    - நெருப்பின் நடுவே நிகழ்த்தப்பட்டது (உபா 5:23, 24). மகிமை வெளிப்படுத்தப்பட்டது
    - சுறுசுறுப்பான பாறையிலிருந்து தண்ணீர் கொண்டு வரப்பட்டது (உபா 8:15)
    - தேவன் தம் மக்களுக்கு முன்பாக வெளியே சென்றார் (சங் 68:7). கடவுளின் பிரசன்னம் இருக்கும்

**கூட்டுபெயர்கள்:**

d. 'ஏல் ஏலியோன்' - உன்னதமான தேவன் (ஆதி 14:18). தெய்வீகத்தை பற்றிய இன்னொரு விவரிப்பை நாம் காண்கின்றோம். உன்னதமான தேவனுடைய (ஏல் ஏலியோன்) ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சைரசமும் கொண்டுவந்து... என்று காண்கின்றோம். இவ்விடத்தில் முதல் முறையாக தெய்வீகத்துவமானது 'ஏல்' என்று விவரிக்கப்படுகின்றது இதன் அர்த்தமானது 'பலமான ஒருவர்' அல்லது 'வல்லமை நிறைந்த ஒருவர்' என்பதாகும். தெய்வீகத்துவத்தை பற்றிய பழைய ஏற்பாட்டின் முதல் விவரிப்பாகிய 'ஏலோஹிம்' என்பது 'ஆராதனைக்குரிய ஒருவர்' என்று அர்த்தப்படுகிறது. 'ஏலியோன்' என்பது மேன்மையான. உயர்ந்த. உன்னதமான. மிக மேலான நிலையை குறிக்க பயன்படும் ஒரு சொற்றொடர் ஆகும். தேவன் உன்னதமான மற்றும் பரிசுத்தமான இடத்தில் வாசம் பண்ணினாலும் ஆதியாகமம் 14:18 வசன பகுதியானது அவரைப் 'தேசிய தலைவர்' மற்றும் 'சேனாதிபதி' ஆகியோரை குறிப்பிடுவது போலவே கூறுகின்றது. 'ஏல் ஏலியோன்' என்ற வார்த்தை முதன்முதலில் விவரிக்கப்படும் இடத்தின் பின்னணியானது முற்றிலுமான ராஜரீகம் கொண்டுள்ள குறிப்பிட்ட இருபகுதிகளை பற்றி சுட்டிக்காட்டுகின்றது. தேவன் பரலோகம் மற்றும் பூலோகத்தின் உரிமையாளர் என்ற வகையில் ஸ்தோத்தரிக்கப்படுகின்றார்.

e. எல்ஷடாய் - சர்வவல்லமையுள்ள தேவன். கர்த்தர் தன் பலத்தை சித்தரிக்கும் இன்னொரு சொற்றொடரை ஆபிரகாமிடத்தில் பயன்படுத்தினார் (ஆதி *17:1*) 'ஷடாய்' என்ற வார்த்தையானது வன்முறையில் ஈடுபடுதல், பாழாக்குதல் அல்லது அழித்தல் என்று அர்த்தப்படுகின்ற வினைச்சொல் ஒன்றிலிருந்து தரவழைக்கப்பட்டதால் தேவன் தம்மை 'ஷடாய்' என்று விவரிக்கும் (சர்வ வல்லமை உள்ளவர்) செயலானது கணிசமான அளவுக்கு சிரமத்தில் வழி நடத்தி உள்ளது. இருப்பினும் இந்த முதல் பயன்பாட்டின் பிண்ணனியானது பேரழிவுக்கான எதையும் காண்பிப்பதில்லை; இது தேவன் கூறியிருக்கின்றபடியாக அவரது செயல்திறனின் வல்லமையை மட்டுமே காண்பிக்கின்றது. 'எல்ஷடாய்' - சர்வ வல்லமை உள்ளவர் 100 வயதான ஒரு தகப்பனுக்கு ஒரு மகனை கொடுக்கக் கூடியவராகவும், 90 வயதான ஒரு பெண்ணை தாயாக்ககூடியவராகவும் இருந்து ஜாதிகளை ஏற்படுத்த கூடியவராக இருந்தார் (ஆதி 17:6). சர்வ வல்லவர் - தேவனுடைய வல்லமையை போல பெரிய வல்லமை எதுவும் இல்லை. ஆகவே பூமிக்கு கீழும், பூமியிலும், பூமிக்கு மேலுமுள்ள ஒவ்வொரு வல்லமையும் நான் சர்வவல்லமையுள்ள தேவனாக இருக்கிறேன் என்று ஆபிரகாமிடத்தில் கூறியவரின் அனுமதிக்கு கீழ்ப்படிந்தவர்களாக அதை சார்ந்து இருப்பவர்களாக அதற்கு அடிபணிந்து இருப்பவர்களாக இருக்கவேண்டும். ஆகையால் ஆபிரகாம் சர்வவல்லமையுள்ள தேவன் பட்சத்தில் நம்பிக்கை கொண்டு அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான் (ரோமர் 4:17, 18)

f. 'ஏல் ஒலம்' - சதாகாலமும் உள்ள தேவன். தேவன் தமது பலத்தை போலவே காலத்திலும் எல்லையற்றவராக இருக்கின்றார் (ஆதி *21:33*). 'ஒலம்' என்ற வார்த்தையானது 'மறைக்க' அல்லது 'ஒளிக்க' என்று அர்த்தப்படும் ஒரு வினைச்சொல்லிளிருந்து வருகின்றது. கொள்கை அடிப்படையில் 'ஒலம்' என்பது மறைக்கப்பட்ட ஒரு காலம்; முடிவற்ற ஒரு காலம் அல்லது எல்லையற்ற ஒரு காலம் என்று அர்த்தப்படமுடியும். 'ஒலம்' என்பதன் காலம் எவ்வளவு

என்பதை சந்தர்ப்பபொருள் தான் (பிண்ணனி) தீர்மானிக்க வேண்டியதாக உள்ளது. **சில வேளைகளில் 'ஒலம்' என்பது எல்லைக்கு உட்பட்டதாக உள்ளது.**

i. ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் பூரிகைகளை ஊதுதல் என்பது ஒரு கட்டளையினால் நித்தியம் ஆக்கப்பட்டது (எண் 10:8). ஆனால் அந்தக் கட்டளை அறிவிக்கப்பட்ட காலம் தொடங்கியே ஆரோனின் ஆசாரியத்துவம் கூட இல்லாது ஒழிந்து போககூடியதாகவே இருந்தது.

ii. இதுபோலவே பரிசுத்த ஸ்தலத்திற்கு முன்பாக இருந்த தொட்டி ஒன்றில் கைகளையும் கால்களையும் கழுவுதல் என்பதும்கூட சதாகாலமும் நித்தியமாயிருக்கும்படி கட்டளையிடப்பட்டது (யாத் 30:20) ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கழுவும் தொட்டியும், பரிசுத்த ஸ்தலமும், ஆசாரியர்களும் இல்லாத நிலை உண்டாகிவிட்டது. அதுபோலவே விருத்தசேதனம் மற்றும் ஓய்வுநாளும் கூட என்றென்றைக்கும் உள்ளதாக அதாவது 'ஒலம்' ஆக இருந்தது. ஆகையால் சில வேளைகளில் 'ஒலம்' என்பது குறுகிய காலத்தை குறித்து ஏற்பட்டதாக இருக்கலாம்.

**i. ஆனால் தேவன் மீது வரையறை எதையும் வைக்க முடியாது**

'ஏல் ஒலம்' - சதாகாலம் உள்ள தேவன்.

- அவர் நித்திய வாசி (ஏசாயா 57:15)
- அநாதியாய் என்றென்றைக்கும் இருப்பவராக உள்ளார் (சங்கீதம் 90:1,2)
- அவர் அழியாமை உடையவராக இருக்கிறார் (1 தீமோத்தேயு 6:16)
- நித்திய கன்மலை (ஏசாயா 26:4)
- அவர் நீண்ட ஆயுள் உள்ளவர் (தானிய 7:9)

**ii. அவரது அடிப்படைப்பண்புகளின் மீதும் வரையறை எதையும் அமைக்கமுடியாது.**

- அவரது பெயர் (யாத் 3:15)
- அவரது அன்பு (எரேமியா 31:3)
- அவரது அன்பு, இரக்கம் (சங்கீதம் 103:17)
- அவரது மகிமை (சங்கீதம் 104:31)
- அவரது சத்தியம் (சங்கீதம் 117:2)
- அவரது நீதி (சங்கீதம் 119:142) ஆகியவை என்றென்றைக்கும் உள்ளன. ஆகவே தேவனுடைய அடிப்படைப் பண்புகளில் வரையறை எதையும் வைக்க முடியாது.

**iii. அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மீதும் வரையறை எதையும் வைக்கமுடியாது.**

பிதாவாகிய தேவனை பற்றியவை உண்மையாய் இருப்பதுபோலவே அவரது குமாரனுடைய புறப்படுதலும் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையதாக இருக்கின்றது; அதாவது 'ஒலம்' ஆக இருக்கின்றது (மீகா 5:2). இயேசு கிறிஸ்துவானவர் தாமே நித்தியபிதா என்றும் (ஏசாயா 9:6) மற்றும் அவரது ஆண்டுகள் முடிந்து போவதில்லை என்றும் (எபி1:10,11,12), அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கின்றார் என்றும் (எபி 13:8) வாசிக்கின்றோம். மனித சொற்றொடர்களின் சொல் வழக்குகளின்படியான வகையில் இயேசு நேரடி அர்த்தத்தில் ஒரு மகனாக இருந்தால் ஒரு தெய்வீக தாய் இருப்பது அவசியமாகும். சரீரப் பிரகாரமான இயேசுவுக்கு மரியாள் தாயாக இருந்த போதிலும் 'லோகோஸ்' என்ற வகையில் தேவனாக இருந்த வார்த்தையானவர் மரியாள் வாழ்வதற்கு முன்னமே இருந்தார் (யோவான் 1,2,3 அதிகாரங்கள்). ஆகையால் பிதா குமாரன் என்கிற உறவு என்பது உருவகநடை என்ற வகையில் எடுத்துக்கொள்ளப்படவேண்டியது அவசியமாகும்.

**iv. தேவன் அருளிச் செய்கின்ற ஜீவன்மேல் வரையறை எதையும் வைக்கமுடியாது.**

மனிதன் ஏதேன் தோட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட பொழுது அவனது வாழ்நாள் வரையறைப்படுத்தப்பட்டது; அவன் இனியும் தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியையும் பறித்து புசித்து என்றைக்கும் உயிரோடு இருக்க முடியாது போயிற்று (ஆதி 3:22). வரையறைகள் எதுவும் இன்றி என்றென்றைக்கும் வாழ்கின்ற இயேசு கிறிஸ்துவானவர் மனிதரை முன்பிருந்த நிலைக்கு கொண்டு வருகின்றார்; அவர் தேவனுடைய பரதேசியில் இருக்கும் ஜீவ விருட்சத்திற்கு மறுபடியும் சென்று அடையும் வழியை மனிதருக்கு கொடுத்திருக்கின்றார் (வெளி 2:7). இப்படிப்பட்ட வாழ்வானது கடைசி நாளில் உயிர்பிக்கப்படுவதில் கிடைப்பதாக உள்ளது (யோவான் 6:40). தேவனானவர் குமாரன் மீது வைத்துள்ள நித்திய ஜீவன் என்பது குமாரனை போலவே

நித்தியமானதாக உள்ளது (1 யோவான் 5:11; லூக்கா 20:36; யோவான் 3:16; ரோமர் 2:7; 1 கொரி 15 50- 55)

v. **கீழ்ப்படியாதவர்களுக்கு ஏற்படும் துன்பத்தின் காலத்தின் மீது வரையறை எதையும் வைக்க முடியாது (ரோமர் 2:8) என்பது பரிதாபகரமானது ஆகும்.**

பரலோகத்தில் தேவனுடன் இருக்கும் மகிழ்வான வாழ்வானது நித்தியமானதாக இருப்பதுபோலவே நரகத்தில் பிசாசு மற்றும் அவனது தூதர்களுடன் துன்பப்படுவதும் நித்தியமானதாகவே உள்ளது (மத்தேயு 25:41.46; 2 தெச 1:6-9). வரையறையற்ற பரலோகம் ஒன்று இருப்பதாக போதிக்கின்ற அதே பரிசுத்த வேதம் வரையறையற்ற நரகம் ஒன்று இருப்பதாகவும் போதிக்கின்றது. துன்மார்க்க மக்கள் யாவரும் துரும்புபோல சுட்டழிக்கப்படுவார்கள்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் (மல்கியா 4:1). மரணத்திற்குப் பின்பு சரீரம் மட்டுமே அழுகின்றது; ஆத்மா அழிவதில்லை. நரகத்தில் செலவிடப்படும் காலத்தின் மீது ஒருவர் வரையறை வைத்தாரென்றால் அதே வேளையில் அவர் பரலோகத்தில் செலவிடப்படும் காலத்தின் மீதும் வரையறை வைக்கின்றார்.

'ஒலம்' என்ற வார்த்தையானது சில வேளைகளில் சந்தர்ப்பபொருளின் பிண்ணணியில் வரையறைகளுடன் பயன்படுத்தப்படுகின்றது. ஆபிரகாம் பலிபீடம் ஒன்றை கட்டி அதை சதாகாலங்களிலும் உள்ள தேவனுக்கு அர்ப்பணித்தபொழுது தாமும் கூட மேன்மையான தேசத்தில் அதாவது பரலோகத்தில் என்றென்றைக்கும் இருப்போம் என்ற விசுவாசம் பெற்றிருந்தார் (எபி 11:14, 15)

g. 'ஏல் ஏலோகே இஸ்ராயேல்' - தேவன் இஸ்ரவேலின் தேவன். யாக்கோபு தேவனுக்கு இந்த ஒரு விசேஷித்த பெயரைக் கொடுத்தார். சீகேம் நகருக்கு பத்திரமாக சென்று சேர்ந்த யாக்கோபு அங்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி தேவனை கனப்படுத்துவதற்காக இந்த பெயரைக் கொடுத்தார் (ஆதியாகமம் 33:18-20). யாக்கோபு பிறந்தபொழுது தன் சகோதரரான ஏசாவின் குதிங்காலை பிடித்துக்கொண்டிருந்தார் அந்த காரணத்திற்காகவே 'குதிங்காலைபற்றுபவர்' என்று அர்த்தப்படும் 'யாக்கோபு' என்று அவர் பெயரிடப்பட்டார். மற்றும் இயற்கை பண்பும், வஞ்சிக்கும் இயல்புமே யாக்கோபின் குணமாயிருந்தது. யாக்கோபு ஏசாவை சூழ்ச்சியால் வென்று தங்கள் பிதாவினிடத்திலிருந்து வரும் பிறப்புரிமையைப் பெற்றார். பின்பு அவர் தமது தகப்பனாகிய ஈசாக்கை வஞ்சித்து ஏசாவுக்கு வைத்திருந்த ஆசீர்வாதத்தையும் பெற்றார். யாக்கோபு தமது வாழ்க்கையின் முதல் 40 ஆண்டுகள் 'குதிங்காலைபின்பற்றுபவராக' வஞ்சிப்பவராக இருந்தான். யாக்கோபு ஏசாவின் கோபத்திற்கு தப்பி ஓடினார் (ஆதி 27:41-44; 28:5). பின்னாளில் 'லூஸ்' இடத்தில் யாக்கோபு தரையில் படுத்திருக்கையில் தரிசனத்தில் கர்த்தர் தோன்றி அதன் மூலம் யாக்கோபு மாபெரும் ஆறுதல் பெற்றார் (ஆதி 35:6-15). யாக்கோபு தமது பாவத்திலிருந்து மனந்திரும்பி கர்த்தருக்கு ஊழியம் செய்யும்படி பொருத்தனை செய்துகொண்டார் என்பது உறுதி. அந்த பொருத்தனையை தனது சிந்தையில் கொண்டவராக அவர் சிரியா நாட்டில் இருபது ஆண்டுகள் வாழ்ந்தார். அவர் தமது இயல்பின்படியாக வஞ்சகச்சூழ்ச்சி மற்றும் ஏமாற்றுதல் ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு பதில் நேர்மையாய் இருக்க தன்னால் முடிந்த அளவு செயல்பட்டார். லாபானின் மந்தையை மேய்த்து பீறுண்டதை தனது சொந்த நஷ்டத்தில் மேற்கொண்டார் (ஆதி 31:39). யாக்கோபு மாறிய ஒரு மனிதராக இருந்தார் உண்மையிலேயே அவர் மனம் மாறி தகுதியாக வாழ முயற்சி செய்தார். மறு ஜென்மம் எடுத்த இம்மனிதர் மறுபடியும் பாலஸ்தீனத்திற்கு திரும்பியபோது இன்னமும் ஏசாவுக்கு பயப்பட்டார். அவரது சிந்தனைகள் வஞ்சித்தலுக்கு திரும்பாமல் கிருபைக்கும் ஜெபத்திற்கும் திரும்பின. "என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும்" என்று அவர் மனித வடிவில் இருந்த தேவனுடன் ஒரு இரவு முழுவதும் வேண்டினார் (ஆதியாகமம் 32:11). போராடிய பிறகு கர்த்தர் யாக்கோபின் பெயரை மாற்றினார். அவருடைய கடந்தகால 20 ஆண்டு வாழ்க்கையில் யாக்கோபு என்ற பெயரானது அவருக்கு அநீதியை இழைத்திருந்தது. ஆகையால் தேவன் இப்பொழுது அவர் 'இஸ்ரவேல்' என்று அழைத்தார் இது 'தேவனோடு போராடியவர்' என்று அர்த்தம் தரும் ஒரு சொற்றொடர் ஆகும். யாக்கோபின் புதிய பெயரின்படி மனிதனோடும் தேவனோடும் போராடி மேற்கொண்டாயே என்றார் (ஆதி 32:28). இப்போது யாக்கோபு 'தேவனுடைய இளவரசர்' ஆனார். பின்பு கானானிற்குள் சமாதானமாய் பிரவேசித்து ஒரு நிலத்தை வாங்கி அங்கே ஒரு

பலிபீடம் கட்டி அங்கே தேவனுக்கு முதன்முதலாக நன்றி உணர்வோடு பலி செலுத்தினான். அந்த பலிபீடத்திற்கு 'ஏல் ஏலோகே இஸ்ராயேல்' என்று பெயரிட்டார்.

h. 'ஏல் பெத்தேல்' - பெத்தேலின் தேவன் (ஆதி 35:7). 'ஏல் ஏலோகே இஸ்ராயேல்' என்ற பலிபீடத்தை கட்டியிருந்த சீகேமிலிருந்து தன்னுடைய பயணத்தைத் தொடர்ந்த யாக்கோபு இப்பொழுது பெத்தேலுக்கு வந்து மற்றொரு பலிபீடம் கட்டுகிறார். 'பெத்தேல்' என்பதற்கு 'தேவனுடைய வீடு' என்று பொருள். இந்த பலிபீடம் அவருடைய தரிசனத்திற்கும் அவருடைய வாக்குத்தத்ததிற்கும் மதிப்பளித்து கட்டப்பட்டதாகும். அவருக்கு தரிசனமான தேவன் அவரை பராமரிப்பேன் என வாக்குத்தத்தம் செய்திருந்த தமது வார்த்தையை நிறைவேற்றி இருந்தார். இஸ்ரவேல் தான் பயணம் தொடங்கிய இடத்திற்கு சமாதானத்துடன் மறுபடியும் வந்து சேர்ந்திருந்தார். அவர் நன்றி உள்ளவராக இருந்து கர்த்தரை ஆராதித்தார்.

**கூட்டுபெயர்கள்:**

- ஏல் ஹேனிமன் - உண்மையுள்ள தேவன் (உபா 7:9)
- ஏல் ஹாக்கடோல் - தேவாதி தேவன் (உபா 10:17)
- ஏல் ஹாக்கடோஸ் - பரிசுத்தமுள்ள தேவன் (ஏசாயா 5:16)
- ஏல் ஹசமேயம் - பரலோகத்தின் தேவன் (சங்கீதம் 136:26)
- ஏல் பியாத் - ஞானமுள்ள தேவன் (1 சாமு 2:3)
- ஏல் எமட் - சத்தியபரர் (சங்கீதம் 31:5)
- ஏல் கிபர் - வல்லமையுள்ள தேவன் (ஏசாயா 9:6)
- ஏல் ஹெக்கவத் - மகிமையின் தேவன் (சங் 29:3)
- ஏல் ஹெனோரா - பயங்கரமான தேவன் (நெகேமியா 9:32)
- ஏல் யெஸ்வாட்டி - என் இரட்சிப்பின் தேவன் (ஏசாயா 12:2)
- ஏல் ரேச்சம் - இரக்கமுள்ள தேவன் (உபாகமம் 4:31)
- இம்மானு ஏல் - நம்மோடிருக்கிற தேவன் (ஏசாயா 7:14)
- ஏல் ஏக்காக் - ஒரே தேவன் (மல்கியா 2:10)
- ஏலாக் எரு ஷலம் - எருசலேமின் தேவன் (எஸ்றா 7:19)
- ஏலா இஸ்ரா ஏல் - இஸ்ரவேலின் தேவன் (எஸ்றா 5:1)
- ஏலாக் ஷமாயா - பரலோகத்தின் தேவன் (எஸ்றா 7:23)
- ஏலாக் ஷமாயா தி ஆரக் - பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் தேவன் (எஸ்றா 5:11)
- ஏலோஹே ஹெடம் - அனாதி தேவன் (உபா 33:27)
- ஏலோஹே மிஸ்பெத் - நீதி செய்கிற தேவன் (ஏசாயா 30:18)
- ஏலோஹே செலிகாட் - மன்னிக்கிற தேவன் (நெகேமியா 9:17)
- ஏலோஹே மரும் - உன்னதமான தேவன் (மீகா 6:6)
- ஏலோஹே மிக்கராவ் - சமீபத்திற்கு தேவன் (எரேமியா 23:23)
- ஏலோஹே மாவ்ஷி - என் அரணான தேவன் அல்லது என் பலமுள்ள தேவன் (சங்கீதம் 43:2)
- ஏலோஹே தேஹிலெட்டி - என் துதியின் தேவன் (சங்கீதம் 109:1)
- ஏலோஹே ஈஸி - என் இரட்சிப்பின் தேவன் (சங்கீதம் 18: 46, 25, 5)
- ஏலோஹிம் ஹிடோஷம் - பரிசுத்த தேவன் (லேவி 19:2; யோசுவா 24:19)
- ஏலோஹிம் ஷா ம் - ஜீவனுள்ள தேவன் (எரேமியா 10:10)
- ஏலோஹே ஏலோஹிம் - தேவாதி தேவன் (உபாகமம் 10:17)